செய்தி வெளியீடு எண். 217 நாள்: 22.04.2017

**திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அரைவைப்பருவம் வரும் அக்டோபர் மாதம் 3-வது வாரத்தில் துவங்க திட்டமிடப்பட்டுள்ளது என மேலாண்மை இயக்குநர் அவர்கள் தகவல்.**

~~~~~

திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் திரு.அ.முருகானந்தம், துணைப்பதிவாளர் பதவியிலிருந்து இணைப்பதிவாளராக பதவி உயர்வு பெற்று 12.04.2017 தேதி முதல் மேலாண்மை இயக்குநராக பணியில் சேர்ந்துள்ளார். ஆலையின் அங்கத்தினர்கள், பணியாளர்கள், தொழிலாளர்கள், வாகன உரிமையாளர்கள் மற்றும் ஏனையோரும் பயனடையும் வகையில் ஆலையின் விவகார எல்லைப்பகுதியில் 2016-2017–ஆம் ஆண்டு நடவுப்பருவத்திற்கு கரும்பு பயிரிட்டுள்ள பதிவில்லா (URC) கரும்பை ஆலை அங்கத்தினர்கள் சம்பந்தப்பட்ட கோட்ட கரும்பு அலுவலர்களை அணுகி பதிவு செய்து எதிர்வரும் 2017-2018–ஆம் ஆண்டு அரைவைப்பருவத்திற்கு சப்ளை செய்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

2015-2016–ஆம் ஆண்டு அரைவைப்பருவம் கடந்த 25.11.2015 அன்று துவங்கி 2,35,628 இலட்சம் டன்கள் கரும்பு அரைவை செய்து 11.04.2016 அன்று நிறுத்தம் செய்யப்பட்டது. அந்த பருவத்திற்கு ஆலைக்கு கரும்பு சப்ளை செய்த அங்கத்தினர்களுக்கு வழங்க வேண்டிய மத்திய அரசின் பரிந்துரை விலை (FRP) தொகையை மாநில அரசிடமிருந்து வழிவகை கடனாக ரூ.7.74 கோடி பெற்று பட்டுவாடா செய்யப்பட்டது. மேலும், 2016-2017–ஆம் ஆண்டு அரைவைப்பருவத்திற்கு கரும்பு சப்ளை செய்த ஆலை அங்கத்தினர்களுக்கு மத்திய அரசின் பரிந்துரை விலை (FRP) தொகை டன் ஒன்றுக்கு ரூ. 2300/- வீதம் முழுவதுமாக பட்டுவாடா செய்யப்பட்டது. எதிர்வரும் 2017-2018–ஆம் ஆண்டு **அரைவைப்பருவம் வரும் அக்டோபர் மாதம் 3-வது வாரத்தில் துவங்க திட்டமிடப்பட்டு** சுமார் 3 இலட்சம் டன்கள் கரும்பு அரைவை செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆலையின் சுத்திகரிப்பு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன்றது என மேலாண்மை இயக்குநர் அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~